(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 181/2023 அ.சா.2

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.** முத்துப்பாண்டி |
| Father's name | : | |
| Village | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2026.

**( எதிரி வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை, பழையகுயவர்பாளைத்தில் குடியிருந்து வருகிறேன். வீடியோ கான்பரன்சில் உள்ள ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நான் அதிகாலையில் நடைபயிற்சி செல்லும் வழக்கம் உண்டு. நான் கடந்த 13.11.2022ம் தேதி காலை 05.45 மணியளவில் நான் நடைபயிற்சி செய்துகொண்டிருக்கும்போது கலா என்பவரிடமிருந்து போன் வந்தது. அந்த போனில் எனக்கு சொந்தமான கார் நிற்கும் இடத்தில் தீப்பற்றி எரிவதாக பதட்டமாக தகவல் தெரிவித்தார். நான் உடனே எனது மனைவி அ.சா.1 அழகுராணிக்கு கார் செட்டில் தீப்பிடித்து எரிவதாகவும் போய் பார்க்குமாறும் சொன்னேன். எனது மனைவி மற்றும் அக்கம்பக்கத்தில் இருந்த நபர்கள் பார்த்து தீயை அமத்திவிட்டனர். அந்த சம்பவத்தில் எங்களுக்கு சேதாரம் எதுவும் ஏற்படவில்லை. பிறகு நான் நடைபயிற்சியை இடையில் நிறுத்திவிட்டு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன். என் மனைவி போலிசில் தகவல் சொன்னதின் பேரில் தீயணைப்பு படையினரும், போலிசாரும் சம்பவ

இடத்தை பார்த்து சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

Sd/- முத்துப்பாண்டி

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.04 07:12:38 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.